செ.வெ.எண்: 84/2018 நாள்: 27.01.2018

**ஓகி புயலால் கடலில் மூழ்கி உயிரிழந்த 5 மீனவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 20 இலட்சம் நிதியுதவியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் கடலில் மூழ்கி உயிரிழந்த 5 மீனவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 20 இலட்சம் நிதியுதவியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.01.2018) வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலில் கடந்த 30.11.2017 அன்று கடலில் மீன்பிடிக்க சென்று மரணமடைந்த மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதன்படி, ஏற்கனவே 16 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

மேலும், சில மீனவர்களின் உடல்கள் கேரள அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. அவைகளில் D.N.A. மூலம் பரிசோதனை செய்யப்பட்டு மேலகடியப்பட்டணத்தை சார்ந்த டேல்பின்ராஜ், குளச்சலை சேர்ந்த ஜாண்டெவிட்சன், நீரோடியை சேர்ந்த கிறிஸ்பின் மற்றும் சேசடிமை, தூத்தூரை சேர்ந்த கில்பர்ட் ஆகிய மீனவர்கள் என உறுதி செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து இன்று (27.01.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள 5 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் நிதியுதவியினை வழங்கினார். கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை ஓகி புயலில் மரணமடைந்த 21 மீனவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.4.20 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது மீன்துறை உதவி இயக்குநர் திரு. நடராஜன், விளவங்கோடு வட்டாட்சியர் திரு. கண்ணன், கல்குளம் வட்டாட்சியர் திரு. ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டம்